11

# VELLORE DISTRICT

## காலாண்டுத் தேர்வு - செப்டம்பர் - 2024

## பொருளியல்

## விடைக் குறிப்புகள்

*PREPARED BY*
**Dr. C. SUDHAKAR M.A., M.Phil., B.Ed.,Ph.D**
GBHSS USSOOR
**K. SUDHAKAR M.A., B.Ed.,**
GHSS PANAMADANGI

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | இ | தனிநபர் பொருளாதார நடவடிக்கைகள் | 11 | அ | சராசரி |
| 2 | ஆ | ஆடம் ஸ்மித் | 12 | இ | |
| 3 | ஆ | தொகுத்தாய்வு முறை | 13 | இ | விளம்பரச் செலவு |
| 4 | ஆ | உச்சமாக | 14 | அ | உற்பத்திக் காரணிகள் |
| 5 | ஆ | மார்ஷல் | 15 | ஆ | பெயரளவுக் கூலி |
| 6 | அ | அலகுத் தேவை நெகிழ்ச்சி | 16 | ஆ | அமைப்பு |
| 7 | ஈ | நிலம் மற்றும் உழைப்பு | 17 | ஆ | |
| 8 | இ | தொழிலமைப்போர் | 18 | ஆ | பொது மற்றும் தனியார் துறைகள் சேர்ந்து செயல்படுவது |
| 9 | ஆ | நேர்மறை | 19 | இ | தமிழ்நாடு |
| 10 | அ | மாறச் செலவு | 20 | ஆ | சமூக நலன் |

**21.** 1. தனிப்பண்டத்தின் விலை, தனிப்பட்ட நிறுவனங்கள், தனி குடும்பங்கள் பற்றி ஆராய்கிறது.
2. இது விலைக்கோட்பாடு என்றும் அழைக்கப்படுகிறது.

**22.** 1.பொருளியலில் பண்டங்கள் என்பது பொருட்கள் மற்றும் பணிகளைக் குறிக்கும்.
2.பண்டங்கள் மற்றும் பணிகள் ஆகிய இரண்டும் மனித விருப்பங்களை பூர்த்தி செய்கின்றன.

**23.** 1. கிஃபன் பொருள்கள் தாழ்ந்தரக பண்டங்கள் (உ.தா.) கம்பு, சோளம்
2. தாழ்ந்தரக பண்டங்களின் விலை குறையும் போது ஏழைகள் அவற்றை குறைவாக வாங்குவர், விலை கூடும்போது அதிகம் வாங்குவர்.

**24.** 1. நிலம் 2.உழைப்பு 3.மூலதனம் 4. தொழில் அமைப்பு

**25.** உற்பத்தி மாற்றத்திற்கு ஏற்ப மாறுபடுவதில்லை, இச்செலவு மாறாமல் நிலையாக இருக்கும்.
(எ.கா:) வாடகை, காப்பீட்டுச் செலவு

**26.** 1. முற்றுரிமை போட்டியில், வேறுபடுத்தப்பட்ட பண்டங்கள் உள்ளன. எனவே
2. முற்றுரிமை போட்டியில், விற்பனையை அதிகரிக்க விளம்பரத்திற்காக அதிகப் பணம் செலவிடப்படுகிறது இது விற்பனை செலவு எனப்படும்.

**27.** 1. பணக்கூலி அல்லது பெயரளவுக்கூலி என்பது ரொக்கமாக (பணம்) வழங்கப்படும் கூலியைக் குறிக்கும்.
2.உண்மைக்கூலி பண்டங்களாகவோ, பணிகளாகவோ கூலியை வழங்குவது. வாங்கும் திறனே உண்மைக்கூலி ஆகும்.

**28.** (i) உயர்ந்த நாட்டு வருமானம்
(ii) உயர்ந்த வாழ்க்கை தரம், மற்றும் முழுவேலைவாய்ப்பு

**29.** 1. தலா வருவாயை இரு மடங்காக உயர்த்த இலக்கு நிர்ணயித்தது.
2. வறுமை விகிதத்தை 15% ஆக குறைத்தல்
3. வளர்ச்சி இலக்கு 8.0% ஆக நிர்ணயித்தது. ஆனால் 7.2% மட்டுமே எட்டப்பட்டது.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**30.** **நுகர்வோர் எச்சம் = தகுதி விலை - உண்மை விலை**
**நுகர்வோர் எச்சம் = TU - (PxQ)**
**TU - மொத்த பயன்பாடு** **P- விலை** **Q-பண்ட அளவு**

**31.** 1. பணிகள் என்பது கண்களுக்கு தெரியாத ஒன்று. அதை உணரமுடியும். (எ.கா.) ஆசிரியர் பணி
2.பணியாளரிடமிருந்து பணிகளை பிரிக்க முடியாது.
3. பணிகள் அழியக் கூடியவை.
4.பணிகள் பல்வேறு இடங்களை பொறுத்து வேறுபடுகின்றன.

**32.** 1. சமநோக்கு வளைகோடு கீழ்நோக்கிய சரிவை கொண்டது.
2.சமநோக்கு வளைகோடு தோற்றுவாய் நோக்கி குவிந்து காணப்படும்.
3.சமநோக்கு வளைகோடு ஒன்றை ஒன்று வெட்டிக்கொள்ளது.
4. சமநோக்கு வளைகோடுகள் X அச்சையோ Y அச்சையோ தொடாது.

**33.** **1.** காப் – டக்லஸ் உற்பத்தி சார்பு உழைப்பு மற்றும் மூலதனம் என்ற உள்ளீடுகளை பயன்படுத்தி எவ்வளவு உற்பத்தி பெற முடியும் என்பதை விளக்குகிறது.
**2.** $Q = AL^{\alpha}K^{\beta}$ **Q =** உற்பத்தி **A =** நேர்மறை நிலை மதிப்பு **K =** மூலதனம் **L =** உழைப்பு
**α (ம) β =** நேர்மறை பின்னம்.
$\alpha + \beta >$ வளர்ந்து செல் விளைவு விதி
$\alpha + \beta =$ மாறா விகித விளைவு விதி
$\alpha + \beta <$ குறைந்து செல் விளைவு விதி

**34.**

| மாறாச் செலவு | மாறும் செலவு |
|---|---|
| 1. உற்பத்தி மாற்றத்திற்கு ஏற்ப மாறுபடுவதில்லை | 1.உற்பத்தி மாறுபடுவதற்கேற்ப மாறுபடும் |
| 2. செலவுகள் மாறாமல் நிலையா இருக்கும் | 2. செலவுகள் மாறிக்கொண்டே இருக்கும். |
| 3. (எ.கா) வாடகை, ஊதியம், இன்ஸ்சூரன்ஸ் | 3.(எ.கா)எரிபொருள்,மின்சாரம்,கச்சாப்பொருள் செலவு |

**35.** (i) வாங்குபவர்களும், விற்பவர்களும் இருக்க வேண்டும்.
(ii) வாங்குவதற்கும், விற்பதற்கும் ஒரு பொருள் இருக்க வேண்டும்...
(iii) விலை இருக்க வேண்டும்.
(iv) நேரடி அல்லது மறைமுக பரிமாற்றம் இருக்க வேண்டும்.

**36.** **(i) பெயரளவு கூலி (அல்லது) பணக்கூலி:** பணமாக வழங்கப்படும் கூலி.
**(ii) உண்மை கூலி:** பண்டங்களாகவோ, பணிகளாகவோ கூலி வழங்கப்படும்.
**(iii) துண்டுக்கூலி:** முடிந்த வேலையின் அளவில் வழங்கப்படும் கூலி.
**(iv) நேரக்கூலி:** உழைக்கும் நேரத்தை பொருத்து வழங்கப்படும் கூலி.

**37.** 1. ஒரு நாட்டின் பொருளாதார முன்னேற்றம் என்பது பொதுவாக அந்நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) மட்டும் குறிப்பிடாமல்.
2. அந்நாட்டு மக்களின் உயர்ந்த வாழ்க்கைத் தரம், நலவாழ்வையும் உள்ளடக்கியது ஆகும்.
3. அதாவது மனிதவள மேம்பாட்டுக் குறியீடு (HDI) மொத்த நாட்டு மகிழ்ச்சிக் குறியீடு (GNHI) ஆகியவற்றை பொறுத்தது.

**38.** 1. வாழ்க்கைத் தரக் குறியீட்டெண்ணை (POLI) மோரிஸ் டி.மோரிஸ் உருவாக்கினார்.
2. இது ஒரு நாட்டின் வாழ்க்கைத் தரத்தினை அளவிடப் பயன்படுகிறது.
3. இதற்காக அவர் எதிர்பார்ப்பு ஆயுட்காலம், குழந்தை இறப்பு வீதம் மற்றும் எழுத்தறிவு வீதம் போன்ற மூன்று குறியீடுகளை பயன்படுத்தினார்.
4.உடல் மற்றும் பணம் சார்ந்த மேம்பாட்டை HDI குறிப்பிடுகிறது. PQLI உடல் சார்ந்த மேம்பாட்டை மட்டுமே குறிக்கிறது.

**39.** **நுண்ணியல் பொருளியல்:**
1. தனி பண்டத்தின் விலை, தனிப்பட்ட நிறுவனங்கள், தனி குடும்பங்கள் பற்றி ஆராய்கிறது.
2.பொருளாதாரத்தில் சிறு பகுதியை மட்டும் கணக்கில் எடுத்துக் கொள்கிறது.
3. இது விலைக் கோட்பாடு என்று அழைக்கப்படுகிறது.

www.Padasalai.Net

**பேரியல் பொருளியல்:**
1. நாட்டின் ஒட்டு மொத்த செயல்பாடுகளைப் பற்றி ஆராய்கிறது.
2. நாட்டின் முழு பொருளாதாரத்தையும் கணக்கில் எடுத்துக் கொள்கிறது.
3. இது வருவாய் கோட்பாடு என்று அழைக்கப்படுகிறது.

**40.** **1. துவக்கப்பணி-** தொழில் முனைவோர் தொழிலை தொடங்குவது முக்கிய பணியாகும்

**2.புத்தாக்கப்பணி -** தொழில் முனைவோர் புதிய தொழில் நுட்பம் புகுத்துபவர்

**3.ஒருங்கிணைத்தல்** - தொழில் முனைவோர் சரியான உற்பத்தி காரணி கலவையை பயன்படுத்துபவார்

**4. கட்டுப்படுத்துதல், வழிகாட்டுதல் மற்றும் மேற்பார்வையிடுதல் -** தொழில் முனைவோர் தொழிலை நெறிபடுத்தும் பணியை செய்கிறார்

**5. இடர்பாடுகளை ஏற்றல் மற்றும் நிச்சயமற்ற தன்மை** - தொழில் முனைவோர் தொழிலில் ஏற்படும் பிரச்சனையை எதிர்கொள்வார்

**41. அ.)**

**1.ஆடம் ஸ்மித்** : ஒரு நாட்டின் செல்வம் எவ்வாறு உருவாக்கப்படுகிறது மற்றும் அதிகரிக்கப்படுகிறது என்பதை விளக்குகின்றார். – **செல்வ இலக்கணம்**

**திறனாய்வு :**
1. மனித நலம் புறகணிக்கப்படுகிறது.
2. செல்வம் என்ற ஒன்றிற்கு மட்டுமே அதிக அளவு முக்கியத்துவம்.

**2.ஆல்பிரட் மார்ஷல் :** மனிதன் முதலில் நலத்தையே மேம்படுத்த முயல்கிறான் செல்வத்தை அல்ல என்கிறார். – **நல இலக்கணம்**

**திறனாய்வு :**
1. நலன் என்பது பற்றி தெளிவாக கூறவில்லை.
2. பொருள்சார் நலனுக்கு மட்டுமே முக்கியத்துவம் அளித்துள்ளார்.

**3.இலயனல் இராபின்சன் :** மனித விருப்பங்கள் எண்ணற்றவை. விருப்பங்களை நிறைவு செய்யும் வளங்கள் பற்றாக்குறையானவை பற்றாக்குறை தெரிவு செய்தலுக்கு வழிவகுக்கிறது. எனவே ராபின்சனின் கூற்றுப்படி பொருளியல் தெரிவு செய்யும் அறிவியல் ஆகும். – **பற்றாக்குறை இலக்கணம்**

**திறனாய்வு :**
1. நலன் தரும் பொருட்கள் அல்லது நலன் தரா பொருட்கள் என்று தரம் பிரிக்கவில்லை.
2. வளர்ச்சி மற்றும் முன்னேற்றம் சார்ந்த கோட்பாடுகளை உள்ளடக்கவில்லை.

**4. பால் ஏ.சாமுவேல்சன் :** பொருளாதாரத்தின் உட்பிரிவுகளை உள்ளடக்கியுள்ளது. காலத்தை உள்ளடக்கியதால் இவரின் இலக்கணம் வளர்ச்சியை உள்ளடக்கியதாக உள்ளது. இவர் பொருளியலை சமூக அறிவியலாக கருதினார். – **வளர்ச்சி இலக்கணம்**

**திறனாய்வு :**
1. உற்பத்தி, பகிர்வு மற்றும் நுகர்வு போன்ற பல கருத்துக்களையும் உள்ளடக்கியுள்ளது.
2. பணம் பயன்படுத்தப்படாத, பண்டமாற்று போருளாதரத்திர்க்கும் பொருந்தக்கூடியது.

**(அல்லது)**

**41. ஆ.)**

**<u>பொருளியலின் தன்மை:</u>**

**1.ஆடம் ஸ்மித்** : ஒரு நாட்டின் செல்வம் எவ்வாறு உருவாக்கப்படுகிறது மற்றும் அதிகரிக்கப்படுகிறது என்பதை விளக்குகின்றார். – **செல்வ இலக்கணம்**

**2.ஆல்பிரட் மார்ஷல் :** மனிதன் முதலில் நலத்தையே மேம்படுத்த முயல்கிறான் செல்வத்தை அல்ல என்கிறார். – **நல இலக்கணம்**

**3.இலயனல் இராபின்சன் :** மனித விருப்பங்கள் எண்ணற்றவை. விருப்பங்களை நிறைவு செய்யும் வளங்கள் பற்றாக்குறையானவை பற்றாக்குறை தெரிவு செய்தலுக்கு வழிவகுக்கிறது. எனவே ராபின்சனின் கூற்றுப்படி பொருளியல் தெரிவு செய்யும் அறிவியல் ஆகும். – **பற்றாக்குறை இலக்கணம்**

**4. பால் ஏ.சாமுவேல்சன் :** பொருளாதாரத்தின் உட்பிரிவுகளை உள்ளடக்கியுள்ளது. காலத்தை உள்ளடக்கியதால் இவரின் இலக்கணம் வளர்ச்சியை உள்ளடக்கியதாக உள்ளது. இவர் பொருளியலை சமூக அறிவியலாக கருதினார். – **வளர்ச்சி இலக்கணம்**

**<u>பொருளியலின் எல்லை:</u>**

**பொருளியல் ஓர் அறிவியல் :** பொருளியல் மனித நடவடிக்கைகளைப் பற்றிப் படிக்கும் ஓர் அறிவியல்.

**பொருளியல் ஓர் கலை :** கலையியல் என்பது ஒரு குறிக்கோளை அடைவதற்கான வழிமுறைகளை பற்றியது. பொருளியல் அறிவியலும் கலையியலும் இணைந்த ஒன்று.

**இயல்புரை பொருளியல் :** உள்ளதை உள்ளவாறே சொல்வது.

**நெறியுரை பொருளியல் :** இது எதுவாக இருக்க வேண்டும் என்பதை விளக்குகிறது.

**42. அ.)**

தேவை விதியை முதலில் 1838 ல் **அகஸ்டின் கூர்னாட்** விளக்கினார்.

**இலக்கணம்,**

"விலை குறையும்போது தேவையின் அளவு அதிகரிக்கிறது விலை அதிகரிக்கும்போது தேவையின் அளவு குறைகிறது" **ஆல்பிரட் மார்ஷல்.**

**எடுகோள்கள்**

1. நுகர்வோரின் வருமானம், விருப்பம் மற்றும் சுவையில் மாற்றம் இல்லை.
2. பிற பொருட்களின் விலையில் மாற்றம் இல்லை.
3. பிற பதிலிகள் இல்லை.
4. பொருளின் தரத்தில் மாற்றம் இல்லை

**அட்டவணை**

**வரைபடம்**

**தேவை விதியின் விதிவிலக்குகள்**

விலை குறைவு தேவை சுருக்கத்தையும் விலை உயர்வு தேவை விரிவையும் ஏற்படுத்தும். இந்நிலையில் தேவை கோடு இடமிருந்து வலமாக மேல் நோக்கி உயரும். இது விதிவிலக்கான தேவை கோடு என அழைக்கப்படுகிறது.

**வரைபடம்**

**(அல்லது)**

**42. ஆ)**

ஆஸ்திரிய பொருளியல் வல்லுநரான H.H. காசன் என்பவர் இவ்விதியை 1854-இல் பொருளியலில் முதன்முதலாக உருவாக்கினார். எனவே ஜெவான்ஸ் இவ்விதியை "காசனின் முதல் நுகர்வு விதி" என அழைத்தார்.

**இலக்கணம்.**

"ஒருவரிடம் உள்ள ஒரு பண்டத்தின் இருப்பு கூடுகின்ற பொழுது ஒவ்வொரு கூடுதல் அலகிலிருந்தும் கிடைக்கும் பயன்பாடு குறைகிறது" **ஆல்பிரட் மார்ஷல்.**

**எடுகோள்கள்.**

1. பயன்பாட்டை அளவிட முடியும்.
2. பணத்தின் இறுதிநிலை பயன்பாடு மாறாது.
3. பண்டங்கள் ஒரே தரமானவை.
4. கால இடைவெளி இன்றி தொடர்ந்து நுகர வேண்டும்.
5. பழக்கவழக்கங்கள் மற்றும் வருமானத்தில் மாற்றமில்லை.

**விதியின் எடுத்துக்காட்டு விளக்கம்.**

ஒரு நுகர்வோர் 7 ஆப்பிள்களை ஒன்றன்பின் ஒன்றாக நுகர விரும்புகிறார். முதல் ஆப்பிள் சாப்பிடும் போது அவருக்கு அதிக பயன்பாடு கிடைக்கிறது. மேலும் ஐந்தாவது ஆப்பிளில் இருந்து பெற்ற பயன்பாடு பூஜ்ஜியம் ஆகும். ஆறாவது, ஏழாவது ஆப்பிளை நுகர்ந்தால் அவர் பெறுவது எதிர்மறை பயன்பாடாகும்.

**அட்டவணை**

**வரைபடம்**

**வரைபட விளக்கம்**

1. மொத்த பயன்பாடு உச்சத்தில் இருக்கும்போது, இறுதிநிலை பயன்பாடு பூஜ்ஜியமாக இருக்கும்.
2. மொத்த பயன்பாடு குறையும்போது, இறுதிநிலை பயன்பாடு எதிர்மறையாக இருக்கும்.


**முக்கியத்துவம்.**

1. பொருளியலில் பல விதிகளுக்கு இது அடிப்படை ஆகும். 2. நிதி அமைச்சருக்கு உதவுகிறது.

**திறனாய்வு.**

1. பயன்பாட்டை அளவிடமுடியாது. 2. தொடர்ந்து நுகர்வது நடைமுறைக்கு சாத்தியமில்லை.

**43. அ.)**




**(அல்லது)**

**43. ஆ)**

பொருளாதார சிக்கனங்கள் என்பது பேரளவு உற்பத்தியில் ஏற்படும் செலவு சார்ந்த நன்மைகள் ஆகும்.

***பொருளாதார சிக்கனங்கள் இரு வகைப்படும் அவை***

1. அகச் சிக்கனங்கள் 2. புறச் சிக்கனங்கள்.

**1. அகச் சிக்கனங்கள்.**

a) தொழில்நுட்பச் சிக்கனங்கள்.
b) நிதிச் சிக்கனங்கள்.
c) உழைப்புச் சிக்கனங்கள்.
d) சந்தை சார்ந்த சிக்கனங்கள்.


**2. புறச் சிக்கனங்கள்**

a) மேம்பட்ட போக்குவரத்து வசதிகள்.
b) வங்கி செயல்பாடு சார்ந்த வசதிகள்.
c) தகவல் மற்றும் தொலைத்தொடர்பு வளர்ச்சி.

**44. அ.)**

***விலை மாறாத போது AR மற்றும் MR கோடுகள் (நிறைவுப் போட்டி)***

| விற்பனை (Q) | AR/P | TR | MR |
|---|---|---|---|
| 1 | 5 | 5 | 5 |
| 2 | 5 | 10 | 5 |
| 3 | 5 | 15 | 5 |
| 4 | 5 | 20 | 5 |
| 5 | 5 | 25 | 5 |
| 6 | 5 | 30 | 5 |





நிறைவுப் போட்டியில் ஒரே விலை நிலவுவதால் AR மற்றும் MR கோடுகள் ஒரே கோடாக இருக்கும்.

**P = AR = MR**

***விலை மாறும் போது AR மற்றும் MR கோடுகள் (நிறைகுறைப் போட்டி)***

| விற்பனை (Q) | AR/P | TR | MR |
|---|---|---|---|
| 1 | 10 | 10 | 10 |
| 2 | 9 | 18 | 8 |
| 3 | 8 | 24 | 6 |
| 4 | 7 | 28 | 4 |
| 5 | 6 | 30 | 2 |
| 6 | 5 | 30 | 0 |
| 7 | 4 | 28 | -2 |
| 8 | 3 | 24 | -4 |
| 9 | 2 | 18 | -6 |
| 10 | 1 | 10 | -8 |




விலை மாறும் போது விலை பேதம் காட்டப்படும். எனவே AR கோட்டிற்கு கீழே MR கோடு இருக்கும்.


**(அல்லது)**

**44. ஆ.)**

(i) எண்ணற்ற வாங்குபவர் மற்றும் விற்போர்
(ii) ஒத்த தன்மையுடைய பண்டங்கள்.
(iii) ஒரே மாதிரியான விலை.
(iv) உள்ளே வருதல் மற்றும் வெளியேறுதலில் தடையில்லை.
(v) போக்குவரத்து செலவு இல்லை.
(vi) உற்பத்தி காரணிகள் இடம் பெயரும்.
(vi) அங்காடி நிலைப்பற்றி அறிந்திருப்பர்
(vii) அரசின் தலையீடு இல்லை.

**45. அ.) *நிறைவுப் போட்டியில் – குறுகிய கால சமநிலை***

*குறுகிய காலத்தில் சில காரணிகள் மட்டும் நிலையானவை. தொழிற்சாலை நிர்ணயிக்கும் விலையை நிறுவனம் ஏற்கும்.*




***வரைபடம் - 1***

*தொழிற்சாலை சமநிலை உற்பத்தி அலகு* 50 *நிலையான விலை* ₹ 10.

***வரைபடம் - 2***

**MC = MR** *நிலையில் சமநிலை அடைகிறது.* 50 *உற்பத்தி அலகுக்கு சராசரி வருவாய் (விலை)* ₹ 10. *சராசரி செலவு* ₹ 8.

***வரைபடம் - 3***

*இலாபத்தால் புதிய நிறுவனங்கள் உள்ளே நுழையும், உற்பத்தி அலகு அதிகரிக்கும், அளிப்பு கூடும் விலை குறையும்.* 50 *உற்பத்தி அலகுக்கு, சராசரி வருவாய் (விலை)* ₹ 10. *சராசரி செலவு* ₹ 12.

***நிறைவுப் போட்டியில் – நீண்ட கால சமநிலை***


A. *நீண்ட கால சமநிலை நிபந்தனைகள்*

**(i) MC = MR**

**(ii) AC = AR**

B. *நீண்ட கால சமநிலை*

***E புள்ளியில்* LMC = MR = AR = LAC**




**(அல்லது)**

**45. ஆ.)**

**I. *இலக்கணம்:***

*"வாரம் என்பது நிலத்தின் உண்மையானதும் அழிக்க முடியாததுமான சக்திகளைப் பயன்படுத்திக கொண்டதற்காக நிலத்தின் விளைச்சலிலிருந்து ஒருபகுதியை நில உரிமையாளருக்கு கொடுப்பதே ஆகும்"*

**டேவிட் ரிக்கார்டோ**

**II. *அனுமானங்கள்:***

1. *நிலம் வளத்தில் வேறுபட்டது.*
2. *குறைந்த செல் விளைவு விதி செயல்படுகிறது.*
3. *நிறைவுப் போட்டி நிலவுகிறது.*
4. *நீண்ட காலத்தை அடிப்படையாகக் கொண்டது.*
5. *நிலத்தின் அமைவிடத்தை பொறுத்து வாரம் அமைகிறது.*


**III. *எடுத்துக்காட்டு:***

*புதியதாக கண்டுபிடிக்கப்பட்ட ஒரு தீவில் குறிப்பிட்ட சில மக்கள் குடியேறுவதாக கொள் வோம். அங்கு மூன்று தரமுடைய நிலங்கள் உள்ளன. அவை* A *வளம் பொருந்திய நலம்,* B *குறைந்த வளமுடைய நிலம்,* C *மிகக்குறைந்த வளமுடைய நிலம்.*

| ***நிலத்தின் தரம்*** | ***உற்பத்தி (மூட்டைகளில்)*** | ***வாரம் (உபரி)*** |
|---|---|---|
| **A** | **40 – 20 =20** | **20** |
| **B** | **30 – 20 = 10** | **10** |
| **C** | **20 – 20 = 0** | **0** |

மேற்கண்ட அட்டவணைப்படி முதலில் குடியேறிய மக்கள் கூட்டம் A நிலத்தையும், அடுத்ததாக குடியேறிய மக்கள் கூட்டம் B நிலத்தையும், மேலும் குடியேறிய மக்கள் கூட்டம் C நிலத்தையும் பயிர் செய்ய பயன்படுத்துவார்கள்.

**V வரைபடம்.**




**VI. வரைபட விளக்கம்:**

வரைபடத்தில் A மற்றும் B தர நிலங்கள் வாரமுள்ள நிலம்,
C தர நிலங்கள் வாரமில்லா நிலங்கள்
அல்லது இறுதிநிலை நிலம்

**VII. குறைபாடுகள்:**

1. நிலத்தின் A, B, C என்ற வரிசை வரலாற்றின் அடிப்படையில் தவறானது.
2. வாரமானது விலையில் சேராது என வாரக் கோட்பாடு குறிப்பிடுகிறது. ஆனால் வாரம் விலையில் சேரும்.

**46. அ)**

**1. இந்தியா ஒரு கலப்பு பொருளாதார நாடு:** இந்திய பொருளாதாரம் கலப்பு பொருளாதாரத்திற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். இங்கு தனியார் துறையும், அரசு துறையும் இணைந்து செயல்படுகிறது.

**2.வேளாண்மையில் இந்தியா முக்கிய பங்கு வகிக்கின்றது:** இந்தியாவில் 60% மக்கள் தங்கள் வாழ்க்கை ஆதாரமாக வேளாண்மை மற்றும் வேளாண்மை சார்ந்த நடவடிக்கையில் ஈடுபடுகிறார்கள்.

**3. வளர்ந்து வரும் சந்தை:** இந்திய சந்தை பல நாடுகளுக்கு வாய்ப்புகளை வழங்குகிறது. முன்னேறி கொண்டிருக்கும் நாடுகளுக்கிடையே இந்தியாவின் சந்தை பிறநாடுகளுக்கு பல்வேறு வாய்ப்புகளை வழங்கி வருகிறது. இந்தியா FDI, FII வழியாக முதலீடு செய்ய ஆர்வம் காட்டி வருகின்றது.

**4. வளர்ந்து வரும் பொருளாதாரம்**: உலக பொருளாதாரத்தில் இந்தியா GDPயில் 7வது இடத்தை கொண்டுள்ளது. சீனா நாட்டிற்கு அடுத்தபடியாக GDP 7.1%பெற்றதன்வாயிலாக இந்தியாவேகமாக வளர்ந்து வருகிறது.

**5. வேகமாக வளரும் பணிகள் துறை:** இந்தியாவின் GDPயில் பெரும் பங்கு பணிகள் துறையின் பங்களிப்பாகும். IT, BPO போன்ற தொழில் நுட்ப சேவைகள் பேரளவு வளர்ச்சி பெற்றுள்ளது.

**6. பேரளவு உள்நாட்டு நுகர்ச்சியை இந்தியா கொண்டுள்ளது.**

**7. மக்கள் தொகையில் இந்தியா அதிக இளைஞர்களை கொண்டுள்ளது.**

**(அல்லது)**

**46. ஆ)**

**1. கிராமக் குடியரசு:** காந்தியடிகள்"கிராமங்களில் இந்தியா வாழ்வதாகக் கூறினார்."

**2. இயந்திரங்கள்:** இயந்திரங்களை 'மிகப்பெரிய பாவம்' என்று வர்ணித்தார்.

**3. தொழில்மயம்:** தொழில்மயம் மனித இனத்தின் பெரும் சாபக்கேடு என்று காந்தி கூறினார்.

**4. உற்பத்தி பரவலாக்கம்:** வீடுகளிலேயே உற்பத்தி நடைபெற வேண்டுமென்றும் விரும்பினார்

**5. கிராம சர்வோதயா:** "உண்மையான இந்தியா வாழ்வது நகரங்களில் இல்லை கிராமங்களில் தான்" கிராமங்கள் தன்னிறைவு பெற வேண்டும் என்றார்.

**6. உடல் உழைப்பு :** மனித உழைப்பு என்பதே உடல் உழைப்பு தான் என்று காந்தி கூறுகிறார்.

**7.அறக்கட்டளை கோட்பாடு:** தற்போதைய முதலாளித்துவ முறையை மாற்றி சமத்துவ சமூகத்தை உருவாக்குவதே அறக்கட்டளைக் கோட்பாடு ஆகும்.

**8. உணவுப் பிரச்சனை :** உணவுப் பொருட்களின் மீதான எந்த கட்டுப்பாடுகளையும் காந்தி எதிர்த்தார்.

**9.மக்கள் தொகை:** மக்கள்தொகையை கட்டுப்படுத்த சுயகட்டுப்பாடு மற்றும் பிரம்மசாரியத்தை வலியுறுத்தினார்.

**10. மது விலக்கு:** மது நமக்கு எந்த விதத்திலும் துணை செய்வதில்லை, இந்தியா குடிகாரர்களின் நாடாக இருப்பதைவிட ஏழைகளின் நாடாக இருப்பதே மேல்.

**47. அ)**

**1. சிறு தொழில்கள் மூலம் வேலைவாய்ப்பு உருவாக்குகிறது.**

சிறு தொழில்கள், அதிக வேலைவாய்ப்பு கொடுக்கும் துறையாக உள்ளது. கைவினைஞர்கள், கலைஞர்கள், அமைப்புசாரா நிறுவனங்களுக்கு வேலைவாய்ப்பை சிறு தொழில் துறை வழங்குகிறது.

**2. சிறு தொழில் மூலம் சமமான மண்டல வளர்ச்சி ஏற்படுத்துகிறது.**

சிறுதொழில்கள் பெரும்பாலும் பின் தங்கிய அமைவதால் பரந்துபட்ட வளர்ச்சியை அளிக்கிறது.

பகுதிகளிலும், கிராமபுறப் பகுதிகளிலும் சிறுதொழில்கள் கிராமபுற மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துகிறது, புதிய தொழில் முனைவோர் உருவாக வாய்ப்பு அளிக்கிறது.

**3. உள்ளூர் வளங்களை பயன்படுத்த சிறுதொழில் உதவி செய்கிறது.**

உள்ளூர் வளங்கள் வீணாகாமல் பலருக்கு பயன்பட சிறுதொழில் காரணமாகிறது. கைவினைப் பொருட்கள் தயாரிப்போரின் பாரம்பரிய குடும்ப திறன்களை வளர்க்க சிறு தொழில் உதவுகிறது.

**4. சிறு தொழில்துறை ஏற்றுமதியை உருவாக்குகிறது.**

சிறு தொழில்துறைக்கு அதி நவீன இயந்திரங்கள் தேவையில்லை. ஆனால் சிறுதொழில் பொருட்களுக்கு வெளிநாட்டில்அதிக தேவை உள்ளது. இந்தியாவில் இருந்து ஏற்றுமதி செய்வதன் மூலம் சிறு தொழில்கள் கணிசமான வெளிநாட்டு வருவாய் ஈட்டுகின்றன.

**5. பெரிய அளவிலான தொழில்களுக்கு சிறு தொழில் நிறுவனங்களின் பங்கு அதிகம்**

பெரிய தொழிற்சாலைகளுக்கு, சிறு தொழில் நிறுவனங்கள் உதிரி பாகங்களை தயாரித்து உதவுகிறது.

பெரிய நிறுவனத்திற்கு துணை நிறுவனங்களாக செயல்படுகின்றன.

**(அல்லது)**

**47. ஆ)**

1. தேசிய மயமாக்கலின் முதன்மையான நோக்கம் பொருளாதார முன்னேற்றத்திற்கும் நிதி தேவைப்பட்டது. சமூக நலத்தை அடைவதேயாகும்.

2. தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் தனியார் முற்றுரிமையைக் (தனியார் ஆதிக்கம்) கட்டுப்படுத்தவும், சமுதாயத்திற்கு எளிதாக கடன் அளிப்பதற்கும் உதவியாக இருந்தன.

3. தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் கிராமப்புற மக்களிடையே வங்கிச் செயல்பாடுகளை ஊக்குவித்தல் மிகுந்த அவசியமாயிருந்தது.

4. வட்டாரங்களிடையே இருந்த ஏற்றத்தாழ்வுகளைக் குறைக்க தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் உதவுகின்றன.

5. வங்கிகள் தேசிய மயமாக்கப்பட்ட பிறகு கிராமப்புற மற்றும் நகர்புறங்களில் பல புதிய வங்கி கிளைகள் தொடங்கப்பட்டன. தேவையான கடன்களை வங்கிகள் கொடுக்க ஆரம்பித்தன.

6. வங்கிகள் தேசிய மயமாக்கப்பட்ட பிறகு வேளாண்மை மற்றும் அதைச் சார்ந்த பிற துறைகளுக்கு

7. 1991 ஆம் ஆண்டிற்கு பிறகு இந்திய வங்கித்துறை பல்வேறு மாற்றங்கள் அடைந்து வளர்ந்து வருகிறது.